# மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | : 36/2017 மற்றும் 13/2022 கூட்டு விசாரணை வழக்கு | வா.சா. | : 1 |
| பெயர் | : ஆச்சிமுத்து | த/பெ. | : ஆறுமுகம் |
| தாலுகா | : நத்தம் | கிராமம் | : தேரடிதெரு |
| தேதி | : 01.09.2023 | வயது | : 53 /2023 |

1969–ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு .44–ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்:

சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் – 12.15 P.M. – 12.35 P.M.

**அசல் வழக்கு 36/2017 ன் பிரதிவாதிகள் மற்றும் 13/2022 வழக்கின் வாதிகள் தரப்பில் கூட்டு குறுக்கு விசாரணை**

2) எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றால் சரி. அ.வ.எண்.36/2017 வழக்கில் சொல்லப்பட்டுள்ள வழக்குச் சொத்துக்கள் எனக்கும், எனது பங்காளி வகையறாக்களுக்கும் பாத்தியப்பட்ட பூர்வீக சொத்து என்றால் சரி. அ.வ.எண்.36/2017 ல் உள்ள பூர்வீக சொத்துக்களில் எங்களுக்கு அரசால் நிலஒப்படைப்பு எதுவும் செய்யப்பட்டதா என்றால் ஞாபகமில்லை, நான் 5 வது தலைமுறையாவேன். பூர்வீகச் சொத்துக்களில் உள்ள சொத்துக்களை யாரிடமாவது கிரையம் வாங்கினோமா என்றால் இல்லை. என் தந்தையின் தாத்தா ஆச்சிமுத்து செட்டியார் தற்போது உயிருடன் இல்லை.

3) என் தாத்தாவின் இறப்புச் சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அவருடைய வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணத்தின்படி 'ஏ' அட்டவணைச் சொத்து 1ம் வாதிக்கும், மருதை செட்டியார் என்பவருக்கும் பாகமாக கிடைத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். அ.வ.எண்.36/2017 வழக்கில் வழக்குரை பத்தி 4 ல் பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை ஆவணத்தில் வழக்குச் சொத்தின் ஒரு பகுதியும், இதரச் சொத்துக்களின்

ஒரு பகுதியும் என்று சொல்லப்பட்டுள்ளது, அந்த ஒரு பகுதி எது என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

4) வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி 'பி' அட்டவணை சொத்து தர்மலிங்கத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் சரி.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு வேண்டுகோளின்படி 11.09.2023 தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 01.09.2023 கையெழுத்து செய்துள்ளார்.

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.